Sithars Astrology
13 C M Nagar, Ramakrishna Mill Water Tank Back Side,Coimbatore
9894156789

# லால் கிதாப் ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| | : | ஜென்ம நட்சத்திரம் | : அஸ்தம் |
| தந்தை பெயர் | : | ஜென்ம ராசி | : கன்னி |
| தாய் பெயர் | : | ஜென்ம லக்னம் | : தனுசு |
| பிறந்த தேதி | : | ஜென்ம திதி | : கிருஷ் / சப்தமி |
| கிழமை | : திங்கள் | ஜென்ம யோகம் | : அதிகண்டம் |
| பிறந்த இடம் | : | ஜென்ம கரணம் | : பவம் |
| பாலினம் | : ஆண் | | |

| | | | |
|---|---|---|---|
| 10:20-III | 12:17-IV<br>செவ் | 09:13-V<br>கேது<br>மா | 03:33-VI<br>28:45-VII |
| 04:09-II | | | |
| புத<br>சுக் | | | 04:09-VIII |
| 28:39-I<br>03:33-XII<br>சூரி | 09:13-XI<br>ராகு | 12:17-X<br>குரு | 10:20-IX<br>சந்<br>சனி |

ஜனன கால
சந்திர தசை இருப்பு
04 வருடம் 04 மாதம் 02 நாள்

Sithars Astrology
13 C.M Nagar, Ramakrishna Mill Water Tank Back Side Coimbatore
9894156789

லால் கிதாப் (லால் கிட்டப்) என்பது உருது மொழி வார்த்தையாகும். லால் என்பதற்கு சிகப்பு என்றும், கிதாப் என்பதற்கு புத்தகம் என்றும் பொருள்படும். பெரிய சிவப்பு புத்தகம் என்று எல்லோராலும் அழைக்கப்படும் லால்கித்தாப் நூலில் கூறியுள்ள பரிகாரத்தின் மூலம் பலன் உரைக்கும் ஜோதிடமுறை அரம்பத்தில் பாரசீகத்தில் இருந்து வடஇந்திய ஹிமாசல குன்று பகுதியில் படர்ந்து வடஇந்தியாவின் வடக்கு பகுதியில் வருட ஜாதகம் போட்டு அதற்கு பரிகாரமாக ராசி, கிரக காரகங்களை சரி செய்யும் முறையாக பயன்பாட்டில் உள்ளது.

அதே லால்கித்தாப் பரிகாரமுறையை நம் தென்னிந்திய ஜோதிடமுறையில் கோட்சாரத்திற்கும் பிறந்த கால ஜாதகத்திற்கும் அதில் உள்ள திசாபுத்திமுறைக்கும் அய்வு செய்து நமது கலாசாரத்திற்கும் நமது ஜோதிட முறைக்கும் மாற்றாமல் ஏற்றவாறு தொகுத்து நம் மென்பொருள் பலன்களை அளிக்கிறது.

லால்கித்தாப்பும் அதன் வரலாறும் :

லால்கித்தாப் (ஹிமாசல பிரதேச மலைச்சாரல்) இமயமலை சாரல்களில் வாழ்ந்து வந்த நமது பண்டிட்கள் இந்த எளிமையான ஜோதிட நுணுக்கங்களையும், பரிகாரங்களையும் தலைமுறை தலைமுறையாக பயன்படுத்தி வந்துள்ளனர். இதை அவர்கள் ஒரு புத்தகமாகவோ, சுவடி வடிவிலோ தொகுத்து வைக்கவில்லை. தலைமுறை தலைமுறையாக குருகுலம் வழியாக செவிவழியாகவே பண்பாட்டில் இருந்துள்ளது. இது புத்தக வடிவில் பாரசீகமொழியில் தான் முதன்முத-ல் இருந்துள்ளது. இது உரான், உராக், அரபிக் நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதன்பின்பு பஞ்சாப் மாகாணத்தை சேர்ந்த பஞ்சாப் ரூப் சந்த்கோஷி என்பவர் பல அண்டுகளாக இமயமலை சாரல் பகுதிகள் முழுவதும் பயணித்து அனைத்து பண்டிட்களிடமிருந்தும் சேகரித்து உருது மொழியில் ஐந்து நூல்களை வெளியிட்டுள்ளார். இதுவே லால்கித்தாப் அனைத்து மக்களும் கிடைக்க பெரிதும் உதவியது.

முதல் நூல் 1939-ல் 383 பக்கங்கள் கொண்ட Ilme Samudri Ki Lal Kitab Ke Farman in 1939 முத-ல் உருது மொழியில் வெளிவந்த நூல் இதன் விலை இரண்டு ரூபா இரண்டு அணா, இரண்டாவது புத்தகம் Ilme Samudri Ki Lal Kitab Forman 1940-ல் 280 பக்கங்கள் கொண்டு ஒரு ரூபாய் ஐந்து அணாவிற்கு வந்தது. இதற்கு அடுத்து மூன்றாவது புத்தகம் 1941-ல் Lak Kitab - Teesra -Hissa என்று அழைக்கப்படுகின்ற Gutka 428 பக்கங்கள் கொண்டு 2 ரூபாய்க்கு வெளிவந்தது. இதற்கடுத்து நான்காவது புத்தகமாக 1942-ல் 384 பக்கங்கள் கொண்ட Ilme Samudrik Ki Lal Kitab என்ற நூல் ரூபாய் நான்கு இரண்டு அணாவிற்கு வெளிவந்தது. இந்த நான்கு புத்தகமும் உருது மொழியில் கிரிதர்லால் என்பவரால் (ஜலந்தர் மாவட்டம் பஞ்சாப் மாகாணத்தில்) வெளியிடப்பட்டது. இவை அனைத்தும் ஹாசி அச்சகத்தில் லாகூரில் அச்சடிக்கப்பட்டு வெளிவந்தது. இதற்கடுத்து ஐந்தாவது நூல் 1952-ல் 1173 பக்கங்கள் கொண்டு டெல்-யில் உள்ள நரேந்தர் அச்சகத்தில் லால்கித்தாப் ஸ்கூல் ஆப் அஸ்ட்ராலஜி என்ற பெயரில் வெளிவந்தது. ராணுவ வீரர்களால் இலவசமாக விநியோகிக்கப்பட்டது. இப்புத்தகமே இன்று மிகப்பிரபலம் அடைந்துள்ளது. அதன்பின் ஹிந்தி மொழியிலும் ஆங்கில மொழியிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு இன்னும் உலகம் முழுவதும் பரவி உள்ளது. இதில் சாமுத்ரிகா லக்ஷணமும், கைரேகையும், லால்கித்தாப்பின் திசையும் (பராசரத்தி-ருந்து வேறுபட்டதிவை). பிறந்தகால ஜாதகத்திற்கும் வருட ஜாதகத்திற்கும் இதற்கான பரிகாரமும் இந்த லால்கித்தாப்பில் இந்த நூ-ல் உள்ள சிறப்பாகும்.

ஆந்த நூலில் உள்ள சிறப்பம்சங்கள் சற்று நம் கலாசாரத்திற்கு மாறுபட்டுள்ளது. கிரகங்களோ, பாவங்களோ அதன் காரகங்களோ மாறுபடவில்லை, எனவே அதன் மூலத்தை மாற்றாமல் நமது கலாசாரத்திற்கு பயன்படுவனவற்றை மட்டும் பல வருடங்களாக

அராய்ந்து பல ஜாதகங்களுக்கு ஒப்பீடு செய்து தமிழில் கொடுத்துள்ளோம். அதை பயன்படுத்தி மக்களின் (வாழ்க்கை நிகழ்வுகளில் ஐற்படும்) துயரங்களை போக்கினால் நாங்கள் அற்றிய பணிக்கு கிடைத்த பெரும் பயனாக அருக்கும் என்று நம்புகின்றோம். அதிலும் மேலும் அய்வு செய்பவர்க்கு அதன் ஒரிஜினல் உருது நூல்களின் நகல்கள் டெல்-யில் உள்ள கோயல் பதிப்பகத்தில் உள்ளது. மற்றும் அங்கிலத்தில் சாகர் பதிப்பகம் வெளியிட்டுள்ள லால்கித்தாப், பின்னி மாதவ்கோஸ்சுவாமி, த.ஆ.செல்லர் ரஞ்சன் பப்ளிகேஷன் வெளியிட்டுள்ள சக்சேனா எழுதிய லால்கித்தாப் டைமன்ட் பப்ளிகேஷன் வெளியிட்டுள்ள லால்கித்தாப் ராதாகிருஷ்ணசாம்-, புஸ்தக் மஹால் வெளியிட்டுள்ள லால்கித்தாப் ம.ஆ.மஹாஜன் சைனி பப்ளிகேஷன் வெளியிட்டுள்ள ரெமிடியல் லால்கித்தாப் ஒ.ஆ.ஜோஷி ஷிலாலேக் டெல்- பப்ளிஷர் வெளியிட்டுள்ள லால்கித்தாப் அஸ்ட்ராலஜி பண்டிட் கிருஷ்ணன் அஷாண்ட் மற்றும் உ அர்ர்ந் வளையத்தின் மூலம் வெளிவந்துள்ள லால்கித்தாப் படித்து மேலும் அய்வு செய்யுங்கள்.

Sithars Astrology,13 C M Nagar, Ramakrishna Mill Water Tank Back Side,Coimbatore,9894156789

## கன்னி ராசிக்காரர்களின் நல்வாழ்விற்கான லால் கிதாப் பரிகாரங்கள்

1.பெண் குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு மூக்குத்தி அணிவிப்பது குடும்பத்திற்கு வளம் சேர்க்கும்.

2.மழை பெய்யும் பொழுது மொட்டை மாடி அல்லது வீட்டின் மேற்கூரையில் மழை நீர் ஒரு பாத்திரத்தில் விழும் படி வைக்க வீட்டிற்கு அதிர்ஷ்டம் உண்டாகும்.

3.வீட்டில் வழிபாடு செய்யும் இடத்தை அடிக்கடி மாற்றக் கூடாது.

4.புத்தாடை அணியும் முன் அவற்றில் கொஞ்சம் கங்கா ஜலம் அல்லது தீர்த்தாகர்ஷண மந்திரம் ஜெபிக்கப்பட்ட தண்ணீரை அந்த ஆடையில் சிறிது தெளித்த பின் அணிந்து வர என்றும் ஆடை ,அணிகலன்களுக்குக் குறை இருக்காது.

5.சனிக்ரஹ சாந்தி செய்து கொள்ளவும்.

6.மது,புகையிலை,புகை போன்ற போதைப் பழக்கங்களை முற்றிலும் தவிர்ப்பது வாழ்வில் உயர்வு தரும்.

7.புதன்கிழமை அன்று ஒரு மண் மூடியில் அகல் விளக்கு வைத்து அதை ஓடும் நீர் அல்லது கடலில் விடவும்.

8.புதன்கிழமைகளில் விரதம் இருப்பது நல்லது.மேலும் அன்று யாரையும் சபிக்கவோ யாருக்கும் வாக்குறுதி (PROMISE) அளிக்கவோ கூடாது.

9.பச்சை நிற கர்ச்சீப் வைத்திருப்பது அதிர்ஷ்டம் தரும்.